# மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மதிப்பெ

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுது அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த ந அமைதல் வேண்டும்.

www.Padasalai.Net

## பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக.

1. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ் !"
- இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்.

(அ) அடிஎதுகை, சீர்மோனை (ஆ) அடிமோனை, அடிஎதுகை

(இ) சீர்எதுகை, அடிமோனை (ஈ) சீர்மோனை, சீர்எதுகை

2. பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | குரங்குகள் | (i) | கன்றுகளைத் தவிர்த்தன |
| (2) | விலங்குகள் | (ii) | மரங்களிலிருந்து வீழ்ந்தன |
| (3) | பறவைகள் | (iii) | குளிரால் நடுங்கின |
| (4) | பசுக்கள் | (iv) | மேய்ச்சலை மறந்தன |

(அ) (1) - (iii), (2) - (ii), (3) - (i), (4) - (iv)

(ஆ) (1) - (i), (2) - (iii), (3) - (iv), (4) - (ii)

(இ) (1) - (ii), (2) - (i), (3) - (iii), (4) - (iv)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)



CS CamScanner

3. 'பலர் துஞ்சவும் தான் துஞ்சான்' - விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும் :

(அ) கணைக்கால் இரும்பொறையை, கபிலர்

(ஆ) சோழன் நெடுங்கிள்ளியை, பாணர்

(இ) கரிகாலனை, உருத்திரங்கண்ணனார்

(ஈ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

4. 'விளியறி ஞமலி' – இதில் குறிப்பிடப்படும் விலங்கு :

(அ) நாய் (ஆ) எருது (இ) யாளி (ஈ) குதிரை

5. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

(அ) கடுக்காய் (ஆ) வசம்பு

(இ) மாவிலைக்கரி (ஈ) மணத்தக்காளியிலைச் சாறு

6. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம். காரணம் :

(அ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

(ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

(இ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

(ஈ) (அ), (ஆ), (இ) அனைத்தும்

7. சரியானவற்றைப் பொருத்தித் தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) | காதை | (i) | கந்தபுராணம் |
| (2) | சருக்கம் | (ii) | சீவகசிந்தாமணி |
| (3) | இலம்பகம் | (iii) | சூளாமணி |
| (4) | படலம் | (iv) | சிலப்பதிகாரம் |

(அ) (1) - (iii), (2) - (iv), (3) - (ii), (4) - (i)

(ஆ) (1) - (iv), (2) - (iii), (3) - (ii), (4) - (i)

(இ) (1) - (iv), (2) - (iii), (3) - (i), (4) - (ii)

(ஈ) (1) - (iii), (2) - (iv), (3) - (i), (4) - (ii)

8. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ... - தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.

(1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்

(2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்

(அ) (1) தவறு; (2) தவறு (ஆ) (1) சரி; (2) தவறு

(இ) (1) சரி; (2) சரி (ஈ) (1) தவறு; (2) சரி

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
CamScanner

9. எளியது, அரியது என்பன

(அ) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு

(ஆ) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை

(இ) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

(ஈ) சொல்வது - சொல்லியபடி செய்வது

10. 'உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில்'

- இத்தொடரில் இடம் பெற்றுள்ள பெயரெச்சம்.

(அ) வளர்ந்த (ஆ) உண்டு (இ) இடந்தனில் (ஈ) பிறந்து

11. ச.த. சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல் :

(அ) சமணமும் தமிழும் (ஆ) பௌத்தமும் தமிழும்

(இ) கிறித்தவமும் தமிழும் (ஈ) இசுலாமும் தமிழும்

12. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி :

(அ) அங்கதம் (ஆ) குறியீடு (இ) தொன்மம் (ஈ) படிமம்

13. பிழையான தொடரைக் கண்டறிக.

(அ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

(ஆ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

(இ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

(ஈ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

14. தோப்பில் முகமது மீரானுக்குச் சாகித்திய அகாதெமி விருது பெற்றுத் தந்த நூல் :

(அ) கூனன் தோப்பு (ஆ) துறைமுகம்

(இ) சாய்வு நாற்காலி (ஈ) ஒரு குட்டித் தீவின் வரைபடம்

[ திருப்பு

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

CamScanner

21. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

## பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. 7

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை ?

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

மாணவர்கள் பெற்றோர்களைத் தமது நண்பர்களாகப் பாவித்து நட்புக் கொள்ள வேண்டும். தமது இன்ப துன்பங்களைப் பெற்றோர்களுடன் பகிர்ந்துக் கொள்ள வேண்டும்.

24. தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.

அரங்கன் வெண்கலப்

25. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

நிலத்தக் கெளறணும்டா அப்பதான் வகுறு நிறையும்.

நிலத்தைக் கிளற (உழ) வேண்டும் அப்பொழுதுதான் வயிறு நிறையும்

www.Padasalai.Net



CS CamScanner

26. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்கவும்.

திண்மை – திண்மை

(தீமை) திண்மை செய்யாமல் இருப்பதும் திண்மையே (வலிமை)

27. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக

(அ) செய்த (ஆ) கலங்கி

செய் + த் + அ பெ.எ.வி கலங்கு + இ

இ – வினையெச்ச விகுதி

28. கலைச் சொல்லாக்கம் தருக.

(அ) Stapler (ஆ) Teller

கம்பி தைக்கும் கருவி காசாளர்

குறிப்பு : **செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்று வினா.**

பின்வரும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்திடுக.

அச்சாணி இல்லாத தேர் போல

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.

(அ) உரனுடை (ஆ) தலைக்கோல்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.

30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்கவும்.

(அ) கோவில் (ஆ) தாமரை

கோ + வில் தா + மரை

## பகுதி – III

## பிரிவு – 1

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. 2x4=8

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்'

- இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

32. சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

33. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

CamScanner